✦ மொட்டு 14 ✦ அக்டோபர் - டிசம்பர் 2021 -தனிச்சுற்றுக்கு மட்டும்- ✦ மலர் 40

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. மலர்

மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்ச்சி இதழ்

2021 ஆம் ஆண்டில் 4807 குழுக்களிலுள்ள 86056 உறுப்பினர்கள் பெற்ற

## இலாபப் பங்கீடு ₹ 66 கோடி



IVDP
ESTD 1979

# உள்ளே...



இலாபப் பங்கீடு 03


ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழுக்களின் கடன் இலக்கு 04


வெள்ள நிவாரணப் பணிகளில் ஐ.வி.டி.பி. 08


கல்விப் பணிகளில் ஐ.வி.டி.பி. 12


மாநிலம் கடந்த மனித நேயப்பணிகள் 18


கல்விச் சேவையில் ஐ.வி.டி.பி. 19


சமுதாயப் பணிகளில் ஐ.வி.டி.பி. 24

கவிதைத் துளிகள்... 26


# நிறுவனர் இதயத்திலிருந்து



## அன்பு சுய உதவிக்குழு உறுப்பினர்களே! பணியாளர்களே!

அனைவரும் வரும் 2022 புத்தாண்டில் அனைத்து வளமும் பெற்று வாழ வாழ்த்துகளோடு, எனது எண்ண ஓட்டங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

உலகமே கொரோனா நோய் தொற்றிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு வரும் இவ்வேளையில், ஓமிக்ரான் எனும் உருமாற்றம் பெற்ற கொரோனா, நாடு முழுவதும் பரவி வருவது அதிர்ச்சியளிக்கிறது. எனவே மீண்டும் நமது வாழ்க்கை முறைகளில் எச்சரிக்கையுடனும், கவனமுடனும் இருப்பது அவசியத் தேவையாகும். ஆகவே அரசு வழங்கும் அறிவுரைகளைப் பின்பற்றி உங்களையும், உங்கள் குடும்பங்களையும் பாதுகாத்துக் கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

கடந்த நவம்பர் மாதம் தமிழகம் முழுவதும் பெய்த கனமழை, வெள்ளத்தால் பல்வேறு இடங்களில் மக்கள் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட போது நமது ஐ.வி.டி.பி உடனடியாக உதவிக்கரம் நீட்டியது. குறிப்பாக **திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட போது உடனடியாக ரூ. 19.64 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை** வழங்கி அவர்களுக்கு நமது ஆதரவையளித்தோம்.

**தற்போது நமது புதிய முயற்சியாக நாம் பணிபுரியும் மாவட்டங்களிலுள்ள இருளர் இன மக்களின் வாழ்வியல் சூழ்நிலைகளையறிந்து அவர்களுக்கென சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றும் முயற்சியாக, ஏறக்குறைய 4500 குடும்பங்களை இனம் கண்டு அவர்களுக்கு தார்பாய், அரிசி, சோலார் விளக்கு மற்றும் போர்வைகள் வழங்கி வருகிறோம். இத்திட்டத்திற்காக ரூ. 1 கோடி இலக்கை நிர்ணயித்து நாம் செயல்படுத்தி வருகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.**

**மேலும் இவ்வாண்டு நமது உறுப்பினர்கள் இலாபப் பங்கீடு மற்றும் உபரி சேமிப்பாக ரூ. 98 கோடியைப் பெற்று பயனடைந்துள்ளனர் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

என்றும் மக்கள் பணியில்...

"இராமன் மகசேசே"
**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர் / தலைவர்



அனைவருக்கும் புத்தாண்டு, 2022 பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



## ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்களின் 2021 ஆம் ஆண்டிற்கான

# இலாபப் பங்கீடு

## ₹ 66 கோடி

உபரி சேமிப்பு
மற்றும்
இலாபப் பங்கீடு
பெறும்
**4807**
குழுக்களுக்கு

"உழைப்பின் பயன் இலாபம்" அவ்வகையில் பெண்கள் முன்னேற்றத்தில் உயர்ந்த இலக்கோடு செயலாற்றி வரும் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் சிறப்பம்சங்களுள் ஒன்று இலாபப் பங்கீடு ஆகும். ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையினைச் சேமித்து வருகின்றனர். அங்ஙனம் சேமித்தத் தொகைக்கு ஏற்றவாறு குறைந்த வட்டியில் உள்கடனைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். அந்த கடனிற்கு பெற்ற வட்டியானது குறிப்பிட்ட கால இடைவெளியில் குழு உறுப்பினர்களுக்கு இலாபமாக பங்கிடப்படுகிறது. இதுவே இலாபப் பங்கீடாகும்.

உபரி சேமிப்பு ₹ 32 கோடி

இலாபப் பங்கீடு ₹ 66 கோடி

மொத்தம்
**₹ 98 கோடி**

இதுவரை உறுப்பினர்கள் பெற்ற
மொத்த இலாபப் பங்கீடு **₹ 727 கோடி**



ஐ.வி.டி.பி நிறுவனருடன் இந்தியன் வங்கி மேலாளர்கள்

## ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கான

# கடன் இலக்கு

11.11.2021 மற்றும் 17.11.2021 அன்று இந்தியன் வங்கி மேலாளர்களுடன் செயல் திட்டக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு இந்தியன் வங்கியின் தருமபுரி மண்டல மேலாளர், திரு. **பழனி** அவர்களும், **தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர்** மற்றும் **வேலூர்** ஆகிய மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கி மேலாளர்களும், ஐ.வி.டி.பி குழுக்கள் செயல்படும் இடங்களில் உள்ள 28 கிளை மேலாளர்களும் கலந்துக் கொண்டு 5904 ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு **ரூ. 347 கோடி வங்கிக்கடன்** வழங்க இலக்கு நிர்ணயித்தனர். மேலும் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் செயல்படும் 375 ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு **ரூ. 20 கோடி** வங்கிக்கடன் இலக்கும் நிர்ணயிக்கப்பட்டது.



மேலும் 2021-2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராம வங்கிகளுடனான செயல் திட்டக் கூட்டம் 29.11.2021 அன்று ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு கிராம வங்கிக்கான கூட்டத்தில், வங்கியின் பொது மேலாளர் திரு. **தாமோதிரன்** அவர்கள் முன்னிலை வகிக்க, வட்டார மேலாளர் திரு. **பாஸ்கரன்** அவர்களும், ஐ.வி.டி.பி குழுக்கள் செயல்படும் இடங்களில் உள்ள **32 கிளை மேலாளர்களும்** கலந்துக் கொண்டு 8464 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு **ரூ. 447 கோடி** வங்கிக்கடன் வழங்க இலக்கு நிர்ணயித்தனர்.

மூன்று வங்கிகளின் இவ்வாண்டிற்கான மொத்த வங்கிக் **கடன் இலக்கு ரூ. 814 கோடி**யாகும். அதுதவிர குழுக்கடனாக **ரூ. 400 கோடி**யும், **ஐ.வி.டி.பி கடனாக ரூ. 36 கோடி**யும், **சுகாதாரத் திட்டங்களுக்கான கடனாக ரூ. 25 கோடி**யும் என ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு **2021-2022 ஆண்டிற்கு ரூ. 1275 கோடி கடன்** வழங்க இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



"மனிதன் எப்பொழுது ஆர்வத்திலிருந்து செயல்படுகிறானோ அப்பொழுது மட்டுமே அவன் சிறந்தவனாகிறான்."

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிக்கடன்

# சிறப்பு வட்டி விகிதம்

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்கள் பெறும் வங்கிக்கடன்களுக்கு வங்கிகள் விதிக்கும் அதே வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கப்படுகின்றன. தற்போது மக்களின் பொருளாதாரத் தேவைகளை மனதிற் கொண்டு ஐ.வி.டி.பி தலைவர் அவர்களின் பெருமுயற்சியினால், அவர் வங்கி நிர்வாகங்களிடம் தொடர்ந்து வலியுறுத்தியதன் விளைவாக, வங்கிகள் வழங்கும் கடனுக்கான வட்டி விகிதங்கள், ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களுக்கு மட்டும் கீழ்கண்டவாறு குறைக்கப்பட்டுள்ளன.

| வங்கிகள் | கடன் தொகை | 30.11.2021 வரை வழங்கப்பட்ட வட்டி விகிதம் | 01.12.2021 முதல் வழங்கப்படும் வட்டி விகிதம் |
|---|---|---|---|
| இந்தியன் வங்கி | ரூ. 10 **இலட்சம்** வரை | 12.50 % | **11.45 %** |
| | ரூ. 10 **இலட்ச**த்திற்கு மேல் | 10.10 % | **10.05 %** |
| தமிழ்நாடு கிராம வங்கி | அனைத்து வகை கடன்களுக்கும் | 12 % | **11.00 %** |
| பேங்க் ஆப் இந்தியா | அனைத்து வகை கடன்களுக்கும் | 9.10 % | **9.10 %** |

## சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# தையற்பயிற்சி



ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில், இரண்டாவது பயிற்சியாக ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த **30 உறுப்பினர்களுக்கு 45 நாட்கள் தையற்தொழில் பயிற்சி** துவங்கப்பட்டது. இப்பயிற்சியை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் துவக்கி வைத்தார்.



"மாற்றக்கூடியதை மாற்றுங்கள், மாறாததை ஏற்றுக்கொள்ளுங்கள், ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை உங்களிடமிருந்து நீக்கிவிடுங்கள்.."




# ஐ.வி.டி.பி.யில் தீபாவளி திருவிழா

## ₹ 33.20 இலட்சம்

தீமை என்னும் இருள் விலகி, நன்மை என்னும் ஒளிபரவும் வகையில் பாரம்பரியச் சிறப்புடனும், மகிழ்ச்சியுடனும் தீபாவளி திருவிழா ஐ.வி.டி.பி.யில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கண்கவர் கலை நிகழ்ச்சிகளோடு சிறப்பிக்கப்பட்ட இவ்விழாவில் **ஊக்கப்பரிசுகள், புத்தாடை, இனிப்புகள், உணவுப்பொருட்கள் தொகுப்பு, இன்வெர்டர் விளக்குகள்** என பல தீபாவளி பரிசுகளைப் பணியாளர்களுக்கு வழங்கி, தனது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார் ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள். அறுசுவை உணவோடு கொண்டாடப்பட்ட இவ்விழாவில் வழங்கப்பட்ட தீபாவளி பரிசுகளின் மொத்த மதிப்பு **ரூ. 33.20 இலட்சம்**.






"உழைப்பதற்கு அஞ்சாதவர்களே எதிர்காலத்தில் சக்திமிக்க மனிதர்களாகத் திகழ்வர்."




# ஐ.வி.டி.பி.யில் புத்தாண்டு வாழ்த்து பகிர்வு விழா

## ₹ 21.41 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனத்தில் ஆண்டுதோறும் புத்தாண்டையொட்டி நிறுவனத்தலைவர் பணியாளர்களுக்கு வாழ்த்துகளைக் கூறி சிறப்புப் பரிசுகளை வழங்குவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டும் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட வாழ்த்து பகிர்வு விழாவில் புத்தாண்டு வாழ்த்துகளுடன், **10 வருடத்திற்கு மேல் பணிபுரியும் 99 பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசாக தலா ரூ. 10 ஆயிரம் என ரூ. 9.90 இலட்சம்** மதிப்பில் **ஊக்கத்தொகையும், ரூ. 4.57 இலட்சம்** மதிப்பிலான **ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் மருத்துவக் காப்பீடும்** வழங்கப்பட்டது. மேலும் கடந்த வருடம் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு ஊக்கப்பரிசாக தங்கப் பதக்கங்களும், அனைத்து பணியாளர்களுக்கும் **ரூ. 6.94 இலட்சம்** மதிப்பிலான போர்வைகள், கேக் என பல்வேறு சிறப்புப் பரிசுகளை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.

## பணியாளர் மருத்துவக் காப்பீடு

STAR Health Insurance
Personal & Caring

ஐ.வி.டி.பி பணியாளர்கள் நலத் திட்டங்களின் ஒரு பகுதியாக பத்து ஆண்டுகள் பணி நிறைவு செய்த பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்கும் திட்டத்தின் கீழ், ஐ.வி.டி.பி.யில் பணிபுரியும்

**98 பணியாளர்களுக்கு ₹ 4.57 இலட்சம்** செலவில்
**ஸ்டார் ஹெல்த் காப்பீட்டு நிறுவனத்தின் மருத்துவக் காப்பீடு** வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி உடல் நலன் குன்றும் பணியாளர்கள் சிறந்த மருத்துவமனைகளில் **ரூ. 2 இலட்சம்** வரையிலான மருத்துவச் சிகிச்சைகளைப் பணம் செலுத்தாமல் பெற இயலும்.



"எளிமையானதாக மாறுவதற்கு முன் அனைத்து விஷயங்களும் கடினமானதே."

# சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## ஐ.வி.டி.பி. ₹ 5.30 இலட்சம்

### வெள்ள நிவாரணம்

வடகிழக்கு பருவமழை மற்றும் அதைத் தொடர்ந்த புயலினால் அதிக மழை பொழிந்ததன் விளைவாக ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால், தமிழக மக்கள் தங்களின் வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்து, உணவின்றி பெரும் சிரமங்களைச் சந்தித்த சூழ்நிலையில், **திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மீனவர்கள், இருளர்கள் மற்றும் பழங்குடியினர்** அதிகம் வசிக்கும் **பாக்கம், அவுரிவாக்கம், மேல் குப்பம், கீழ் குப்பம் மற்றும் கணவான்துறை** ஆகிய குக்கிராமங்களைச் சேர்ந்த **650 குடும்பங்களுக்கு தலா ரூ. 800 மதிப்பில் அரிசி மற்றும் போர்வைகளை** ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் நிவாரணமாக வழங்கினார்.





"எதை நாம் சரியாக புரிந்துக்கொள்ளவில்லையோ, அதையே நாம் நம்ப மறுக்கின்றோம்."

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வெள்ள நிவாரண உதவி

## ₹ 14.34 இலட்சம்

திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சார்ந்த **அண்ணாண்டப்பட்டி, எம்.ஜி.ஆர் நகர், போஸ்கோ தெரு, எல்.ஐ.சி. தெரு, பூங்குளம், பள்ளிகொண்டா, விண்ணமங்கலம், உதயேந்திரம் மற்றும் பொன்னேரி** பகுதிகளில் பெரும் வெள்ளம் சூழ்ந்ததால், ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் வீடுகளை இழந்து, உணவிற்கு வழியின்றி பெரும் இன்னலுக்கு ஆளாகினர். அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப ஐ.வி.டி.பி. நிறுவனம் **ரூ. 14.34 இலட்சம்** மதிப்பிலான **அரிசி, உணவு பொருட்கள், போர்வைகள் மற்றும் தார்பாய்களை** வழங்கி தன் உதவிக்கரத்தை நீட்டியது.



பள்ளிக்கொண்டா பகுதியில் வெள்ள நிவாரணப் பணி

"நாளை நாளை என ஒரு காரியத்தை தள்ளிப்போடுவது வெற்றியை தள்ளி வைப்பது போலாகும்."

## நிவாரணப் பொருட்களை

**ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று வழங்கினார்.**



**விண்ணமங்கலம் பகுதியில் வெள்ள நிவாராணப் பணி**



**திருப்பத்தூர் பகுதியில் வெள்ள நிவாராணப்பணி**



"நம் மனம் எதைப்பற்றி அடிக்கடி சிந்திக்கிறதோ, அதை நடத்தவே உன் மனம் வழிக்காட்டும்."



பொன்னேரி பகுதியில் வெள்ள நிவாராணப் பணி

| | |
|---|---|
| சென்னையைச் சார்ந்த 650 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் | ₹ 5.30 இலட்சம் |
| திருப்பத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த 290 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் | ₹ 4.08 இலட்சம் |
| பள்ளிகொண்டா பகுதியைச் சார்ந்த 160 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் | ₹ 6.79 இலட்சம் |
| விண்ணமங்கலம் பகுதியைச் சார்ந்த 58 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் | ₹ 2.57 இலட்சம் |
| உதயேந்திரம் பகுதியைச் சார்ந்த 21 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் | ₹ 0.90 இலட்சம் |

இவ்வாண்டு பேரிடர் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் இதுவரை **₹ 19.64 இலட்சத்தை** வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



"மலர்களுக்கு சூரிய ஒளி எப்படியோ அதுபோல மனித நேயத்திற்கு புன்னகை."

## கல்லூரிகளில் பயிலும் பெற்றோர்களை இழந்த

## 776 மாணவ மாணவிகளுக்கு

# கல்வி உதவித்தொகை

₹ **62.13 இலட்சம்**

ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகளில் முதன்மையானது பெற்றோரை இழந்த கல்லூரி மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமாகும்.



✦ அக்சீலியம் கல்லூரி, வேலூர்



✦ தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்

**இத்திட்டத்தின் கீழ் பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 10,000மும் பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 7,500மும் என கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது ஐ.வி.டி.பி. நிறுவனம்.**



✦ தொன் போஸ்கோ கலைக் கல்லூரி, தருமபுரி




✦ செயிண்ட் ஜோசப் மகளிர் கல்லூரி, திருப்பூர்



"விவாதத்தில் நிச்சயமாக வெற்றி பெற ஒரே வழிதான் உண்டு. அது விவாதங்களை தவிர்ப்பதுதான்."



✦ கொன்சாகா கல்லூரி, எலத்தகிரி

கல்லூரிகளின் முதல்வர்கள் தலைமையில் நடைபெற்ற உதவித்தொகை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு கல்வி உதவித்தொகையை மாணவர்களுக்கு வழங்கி பேசிய ஐ.வி.டி.பி தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள், ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கும் **இக்கல்வி உதவித்தொகையைப் பயன்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கி, மறைந்த தங்கள் பெற்றோரின் கனவுகளை நிறைவேற்ற வேண்டும்** என அறிவுறுத்தினார்.



✦ புனித லூயிஸ் மருத்துவமனை செவிலியர் பயிற்சி பள்ளி, கிருஷ்ணகிரி



"எல்லாம் போய்விட்டாலும் வெல்ல முடியாத உள்ளம் இருந்தால் உலகத்தையே கைப்பற்றலாம்."

| | | |
|---|---|---|
| கிருஷ்ணகிரி, புனித லூயிஸ் மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி பெறும் **8 மாணவியருக்கு** | ₹ **0.80** | இலட்சம் |
| திருப்பூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் **43 மாணவியருக்கு** | ₹ **3.30** | இலட்சம் |
| ஒசூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் **90 மாணவியருக்கு** | ₹ **6.85** | இலட்சம் |
| திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் பயிலும் **171 மாணவ மாணவியருக்கு** | ₹ **13.10** | இலட்சம் |
| வேலூர் அக்சீலியம் கல்லூரியில் பயிலும் **144 மாணவியருக்கு** | ₹ **11.00** | இலட்சம் |
| தர்மபுரி தொன் போஸ்கோ கலைக் கல்லூரியில் பயிலும் **114 மாணவ மாணவியருக்கு** | ₹ **8.57** | இலட்சம் |
| தர்மபுரி தொன் போஸ்கோ கல்வியியல் கல்லூரியில் பயிலும் **11 மாணவ மாணவியருக்கு** | ₹ **1.10** | இலட்சம் |
| ஏலகிரி தொன் போஸ்கோ கல்லூரியில் பயிலும் **83 மாணவ மாணவியருக்கு** | ₹ **6.37** | இலட்சம் |
| ஏலத்தகிரி கொன்சாகா கல்லூரியில் பயிலும் **71 மாணவியருக்கு** | ₹ **5.60** | இலட்சம் |
| பிற கல்லூரிகளில் பயிலும் **41 மாணவ, மாணவியருக்கு** | ₹ **5.44** | இலட்சம் |
| இக்கல்வியாண்டில் கல்லூரிகளில் பயிலும் **776 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட மொத்த கல்வி உதவித் தொகை** | ₹ **62.13** | இலட்சம் |

**இதுவரை இத்திட்டத்தின் கீழ் ₹ 2.67 கோடி கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

## மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த பள்ளிகளுக்கு

# ஸ்மார்ட் போர்டுகள்

பள்ளிகளில் வழக்கமான முறையில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் பணிகள் தற்போது மாற்றமடைந்து நவீன முறையில் ஸ்மார்ட் போர்டு வகுப்பறைகள் மூலம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இம்முறையை ஊக்குவிக்கும் வகையில் ஐ.வி.டி.பி நிறுவனம், பள்ளிகளின் பங்களிப்போடு ஸ்மார்ட் போர்டு உபகரணங்களை வழங்கியது.



கிருஷ்ணகிரி மாவட்டம், **மதகொண்டப்பள்ளி நமது மாதா துவக்கப்பள்ளி**க்கு ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் பங்களிப்பு **ரூ. 67,500,** பள்ளியின் பங்களிப்பு **ரூ. 61,852**



கிருஷ்ணகிரி மாவட்டம், **தாசரப்பள்ளி தூய சகாய மாதா நடுநிலைப்பள்ளி**க்கு ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் பங்களிப்பு **ரூ. 62,500,** பள்ளியின் பங்களிப்பு **ரூ. 58,652**



"தீர்வுகளில் கவனம் செலுத்துவதே முக்கியம்; பிரச்சினைகளில் அல்ல."

# இணைய வழிக் கற்றல் மற்றும் கற்பித்தலை எளிதாக்க அரசுப் பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி. யும் ரோட்டரி சங்கமும் இணைந்து

₹ **1.45 இலட்சம்**

## LED TV நன்கொடை




இணைய வழிக் கல்வியின் தேவை மிகவும் அவசியத் தேவையாக இருக்கும் இக்கணினியுகத்தில், கிராமப்புறங்களில் பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் பயனடையும் வகையில், ஐ.வி.டி.பி நிறுவனமும், கிருஷ்ணகிரி மாநகர் ரோட்டரி சங்கமும் இணைந்து 16 அரசுப் பள்ளிகளுக்கு மின்னனு கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு **ரூ. 2.90 இலட்சம்** மதிப்பிலான **LED TV** க்களை வழங்கியது. இதில் ஐ.வி.டி.பி.யின் பங்களிப்பான **ரூ. 1.45 இலட்சம்** மதிப்பிலான **8 LED TV** க்களை **(LG 32")** ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள், அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களிடம் வழங்கினார்.

"உன்னால் முடியும் என்று எண்ணுவதையோ
அல்லது முடியும் என்று கனவு காண்பதையோ துணிந்து தொடங்கு.
உனது துணிவிலேயே அறிவும், ஆற்றலும்,
மந்திரமும் அடங்கியுள்ளன."



₹ 9.5 இலட்சம்

# ஐ.வி.டி.பி.யின் மாநிலம் கடந்த மனித நேயப் பணிகள்

திரிபுரா மாநிலம், மொகர்பரா பகுதியைச் சார்ந்த நோட்டர் டேம் ஹோலிகிராஸ் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் பயனடையும் வகையில் **500 மாணவர்களுக்கு ரூ. 3.8 இலட்சம்** மதிப்பிலான **சோலார்** மற்றும் **இன்வெர்டர் விளக்குகள்**, அங்கு விடுதியில் தங்கி பயிலும் **168 குழந்தைகளுக்கு ரூ. 1.6 இலட்சம்** மதிப்பிலான **குளிர்கால உடைகள்,** மேலும் அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஜஸ்ட் சுய உதவிக்குழு அமைப்பினைச் சார்ந்த பணியாளர்கள், ஆஷா சமூக பணி மையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் என மொத்தம் **102 பணியாளர்களுக்கு ரூ. 4.1 இலட்சம்** மதிப்பிலான **டின்னர் செட்டுகளை** ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கி ஊக்கப்படுத்தினார்.



**இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 9.5 இலட்சம் ஆகும்.**



"ஒரு நல்ல புத்தகம் திறந்து கொண்டால் நரகத்தின் வாசல் மூடப்படும்"

## திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரிக்கு
# நூலகப் புத்தகங்கள்

₹ 2 இலட்சம்

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் நூலகத்தை மேம்படுத்தும் நோக்கிலும், மாணவர்களிடையே வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டும் கல்லூரியின் நூலகத்திற்கு **ரூ. 2 இலட்சம்** மதிப்பிலான புத்தகங்களை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

₹ 1.20 இலட்சம்

## இஸ்லாமிக் கல்வி அறக்கட்டளை நிகழ்வில் மாணக்கர்களுக்கு
# புத்தகப் பைகள்




கிருஷ்ணகிரி இஸ்லாமிக் கல்வி அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்கிய விழாவில் பங்கேற்ற ஐ.வி.டி.பி தலைவர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள், கல்வி உதவித்தொகை பெற்ற **100 மாணாக்கர்**களுக்கு தலா **ரூ. 1,200** மதிப்பிலான **Fastrack புத்தகப் பைகளை** வழங்கினார். இதன் மொத்த மதிப்பு **ரூ. 1.20 இலட்ச**மாகும்.



"குழந்தையின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில் அடங்கி இருக்கிறது."

# கல்லூரியில் பயிலும் 3455 மாணவியருக்கு

## ₹ 13 இலட்சம் மதிப்பிலான சீருடை

நாளைய சமுதாயத்தின் முதுகெலும்பாகத் திகழும் மாணவ, மாணவியரிடையே பொருளாதார அடிப்படையில், ஏற்றத் தாழ்வுகளின்றி, சமத்துவ மனப்பான்மையுடன் கல்லூரிக்கு வரும் பொருட்டு சீருடைகளை ஐ.வி.டி.பி தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.



காரிமங்கலம் அரசு கல்லூரியில் பயிலும் 3215 மாணவிகளுக்கு **ரூ. 12 இலட்சம்** மதிப்பிலான **சீருடைகள்**



ஏலகிரி தொன் போஸ்கோ கல்லூரியில் பயிலும் 240 மாணவிகளுக்கு **ரூ. 1 இலட்சம்** மதிப்பிலான **சீருடைகள்**



"பயம், அச்சம் இரண்டிற்கும் பதிலாக வெற்றி மகிழ்ச்சி இரண்டையும் சிந்திக்கப் பழகுங்கள்."

## அரசு மகளிர் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு

# ஆங்கில இணைப்புப் பயிற்சி

₹ 2.75 இலட்சம்




மேல்நிலைக் கல்வியை தமிழ் வழியில் பயின்று கல்லூரிக் கல்வியை ஆங்கில வழியில் பயிலும் போது கிராமப்புற மாணவியர் சந்திக்கும் பிரச்சனைகளைத் தவிர்க்கும் பொருட்டு கிருஷ்ணகிரி மற்றும் காரிமங்கலத்தில் செயல்படும் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிகளில் பயிலும் **1740 மாணவியருக்கு** திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் ஆங்கிலத் துறை பேராசிரியர்களைக் கொண்டு ஆங்கில இணைப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் போது வழங்கப்பட்ட புத்தகம் மற்றும் பயிற்சிக் கட்டணமான **ரூ. 2.75 இலட்சத்தை** ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியது.



மேலும் மாணவியருக்கு ஆங்கில இணைப்புப் பயிற்சி வழங்கிய திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் **25 ஆங்கிலத் துறை பேராசிரியர்களுக்கு** தலா **ரூ. 675** மதிப்பிலான **பவர் பேங்க்** வழங்கப்பட்டது.




# ஆசிரியர்களை ஊக்கப்படுத்த ₹ 8.34 இலட்சம் மதிப்பிலான டின்னர் செட்டுகள்



ஒசூர், **செயிண்ட் ஜோசப் கல்லூரி**யில் பணியாற்றும் **102 உதவிப் பேராசிரியர்களுக்கு** ஊக்கமளிக்கும் வகையில் **ரூ. 4.1 இலட்சம்** மதிப்பிலான டின்னர் செட்டுகளையும், **திருப்பத்தூர், மேரி இம்மாகுலேட் பள்ளி**யின் 75வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அப்பள்ளியில் பணியாற்றும் **21 ஆசிரியர்களுக்கு ரூ. 84 ஆயிரம்** மதிப்பிலான டின்னர் செட்டுகளையும், திண்டுக்கல் மாவட்டம், **வக்கம்பட்டி ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி**யில் பணியாற்றும் **85 ஆசிரியர்களுக்கு ரூ. 3.40 இலட்சம்** மதிப்பிலான டின்னர் செட்டுகளையும் ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.



"மனம் விட்டுப் பேசுவதைவிட சிறந்த தீர்வு வேறில்லை."

# சிறுமலர் பள்ளிக் குழந்தைகளுக்கு சோலார் விளக்கு

₹ 3 இலட்சம்

திருச்சி மாவட்டம், வெள்ளக்குளத்தைச் சார்ந்த சிறுமலர் பள்ளியில் பயிலும் **444 மாணவ மாணவியர்** மின்சாரத் தடையின் போதும் கல்வி கற்பதற்கு உதவும் வகையில் **ரூ. 3 இலட்சம்** மதிப்பிலான சோலார் விளக்குகள் வழங்கப்பட்டது.





**தர்மபுரி, தொன் போஸ்கோ கல்லூரியில் சமூகப் பணித்துறையில் பயிலும் மாணவ மாணவியரின் ஐ.வி.டி.பி நிறுவனம் நோக்கிய களப்பயணம்.**



"வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டுமானால் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

# விபத்தினால் காயமடைந்த சிறுவனின் அறுவைச் சிகிச்சைக்கு

## ₹ 1 இலட்சம் நிதியுதவி



விபத்தினால் தலையில் பலத்த காயமடைந்து பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் **யுகேஷ்** எனும் **5 வயது சிறுவனுக்கு அறுவைச் சிகிச்சை** மேற்கொள்ள நிதியின்றி தவித்த பெற்றோரின் கோரிக்கையை ஏற்று, ஐ.வி.டி.பி. நிறுவனம் **ரூ. 1 இலட்சம்**, கிருஷ்ணகிரி மாநகர் ரோட்டரி சங்கம் **ரூ.** 50,000 என **ரூ. 1.50 இலட்சம்** நிதியுதவியை வழங்கியது. சிகிச்சைக்குப் பின் தற்போது சிறுவன் பூரண குணமடைந்து நலமுடன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ சிகிச்சைக்காக ரூ. 1 இலட்சம்

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் கணினி அறிவியல் துறை பேராசிரியர் திரு. **கார்த்திக்** அவர்களின் மருத்துவச் சிகிச்சைக்காக **ரூ.1 இலட்சத்திற்கான** காசோலையை வழங்கினார் ஐ.வி.டி.பி தலைவர்.





"நீங்கள் எப்படியும் யோசித்தேயாக வேண்டும், அதை ஏன் பெரிதாக யோசிக்கக்கூடாது?"

## மனிதம் மாறவில்லை!



திருப்பத்தூர் மாவட்டம், பக்கிரிதர்கா கிராமத்தைச் சார்ந்தவர்கள் திருமதி **பரிமளா, பாலு** தம்பதியினர். அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தனது கிராம மக்களுக்கு தன் சொந்த செலவில் மூன்று வேளையும் உணவு வழங்கி, தங்களுக்கு உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்துக் கொண்ட அவர்களின் மனித நேயத்தைப் பாராட்டி ஐ.வி.டி.பி.யின் சார்பாக **ரூ. 25,000** வழங்கி வாழ்த்தினார் ஐ.வி.டி.பி தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு மதிய உணவு

₹ 30 ஆயிரம்



கிருஷ்ணகிரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் நடைப்பெற்ற மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் முகாமில் பங்கேற்ற **250 மாற்றுத்திறனாளிகளுக்கு** **ரூ. 30 ஆயிரம்** மதிப்பிலான **மதிய உணவை ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கியது.**

₹ 42 ஆயிரம்

## நோயுற்றோர் பயன்பாட்டிற்கான உபகரணங்கள்



ஐ.வி.டி.பி நிறுவனம், நாட்றாம்பாளையம் சேசுராஜபுரத்தில் உள்ள நோயுற்ற ஏழை முதியோர்களின் நலன் கருதி, சக்கர நாற்காலிகள், மழைக்காலத்திற்கேற்ப கட்டில்கள், போர்வைகள் மற்றும் வாக்கர்கள் போன்ற உபகரணங்களை வழங்கி உதவியது.
**இவற்றின் மதிப்பு ரூ. 42 ஆயிரம்.**





"இலக்கு இல்லாத மனிதன், சுக்கான் இல்லாத கப்பலைப் போன்றவன்."

# குழந்தை பிரான்சிஸ்!

இந்தியாவின் தென் பகுதியில் ஒரு நட்சத்திரமாய் ஒளிர்ந்து
விழித்த கண்களால் ஏழைகள் கண்ட கனவை நனவாக்கியவர்!
அவர் எந்த அரசக் குடும்பத்தை சார்ந்தவரல்ல,
பாரம்பரியச் சொத்திற்கும் வாரிசும் அல்ல!

படிப்பறியா ஏழைக் குடும்பத்தின் குழந்தையாக
கடவுளின் ஆசீர்வாதத்தினால்
பழைய துணியில் பொதிந்த அன்பு மகனாக
வறுமையெனும் மண்ணில் பிறந்தவரே குழந்தை பிரான்சிஸ்!

தாயின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்து
குழந்தைப் பருவத்தில் வேடிக்கை விளையாட்டுகள் அறியாக் குழந்தை!
பசி ஏழ்மை துன்பம் மட்டுமே வாழ்வில் கண்டும்
குடும்பத்தின் நம்பிக்கை நாயகனாய் திகழ்ந்தவரே!

கல்வி எனும் ஏணிப்படியில் அறிவாற்றலோடு விளங்கி
கல்வியெனும் கரையைக் கடக்கும் வேளையில்
ஏழைக்குடும்பங்கள் கடனிலும் கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கி
இருந்த நிலமும் பறிபோய் தாய்மார்கள் கதறவே!

தாய்மார்களின் கதறல் அவரின் வாழ்க்கை திசையை மாற்றவே
கந்து வட்டிக்காரர்களிடமிருந்து ஏழைகளைப் பாதுகாக்க
போராட்ட வாழ்க்கைப் பாதையில் பல நிலைகளைக் கடந்து
பாதிக்கப்பட்டவர்களுக்கென சமூக சேவகரானாரே!

கிருஷ்ணகிரியில் ஐ.வி.டி.பி எனும் தொண்டு நிறுவனம் உருவாக்கி
ஏழைக் குழந்தைகளுக்கென பள்ளிகள், கணினி பயிற்சி மையங்கள்
ஏழைக் குடும்பங்களுக்காக நீர் வசதிகள், தடுப்பணைகள், தொழிற்பயிற்சிகள்
ஏழைப் பெண்களுக்கென சுய உதவிக்குழுக்களும் உருவாக்கினாரே!

ஏழைகளின் வாழ்வில் அணையா விளக்காய் ஒளிர்ந்த
உன்னத செயலுக்காக இராமன் மகசேசே விருதினை பெற்றாரே!
பல சகாப்தங்களைத் தாண்டி பெற்ற இந்த வெற்றி தருணத்திலும்
தம் உறுப்பினர்களுக்கு நன்றியை மனமுவந்து நல்கினாரே!

திருமதி. **சுமன் லதா சர்மா**, புதுடில்லி.
(இந்தி மொழியில் எழுதிய கவிதையின் தமிழாக்கம்)

## மக்கள் மனதில் மகசேசே!!!

விருதுகளை வேண்டாத வீரமான கர்ணர் நீர்!
சிறுமைகளைத் தகர்க்க வந்த சேலத்து சிங்கம் நீர்!
வாடிக்கிடந்தவனின் வயிற்றையும் மூளையையும்
தேடிச்சென்று நிரப்பி திசைக்காட்டியவர் நீர்!
அடுப்பெரியா வீடுகளின் அரும்புகட்குச் சோறூட்டி
படிப்பறியாக் கூரைகளில் பட்டங்கள் வேய்ந்தவர் நீர்!
பயிற்சி கழகமாய் பல்கலைக்கழகத்தில் படிக்கும்
மேதைகட்கும் பாடநூலகராய் நீர்!
வறியவர்களின் வாழ்க்கையை உயர்த்த வந்த வள்ளல் நீர்!
கொரோனா நிவாரணமாய் கோடிகளை வழங்கியும்
வறட்சியால் பாதித்தவர்களுக்கு துயர்துடைப்பு பணிகளாம்
பெண்ணிய நலனில் அக்கறை கொண்ட தற்காலப் பெரியாராகவும்
பெண்களின் முன்னேற்றத்தைப் பாராட்டும் பாரதியாகவும்
பெண்கல்விக்குத் தோள் கொடுக்கும் காமராசராகவும்
பெண்ணடிமையை அகற்றி ஆணுக்கு பெண் சரிநிகர் என்று
பெண்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் அறிஞர் அண்ணாவாகவும்
பெண் சமூகமே இந்த நாட்டின் உயிர்நாடி என்பதற்கிணங்க
மகளிர்கென  தனி அமைப்பைக் கொடுத்த அன்னிபெசன்டாகவும்
பெண் குழந்தைகளுக்காக தனி உலகை உருவாக்கி
மக்கள் மனதில் என்றுமே வாழும் "இராமன் மகசேசே" நீர்!
இன்று போல் உம்பணி என்றும் சிறக்க வாழ்த்தி வணங்குகிறோம்!

அன்புடன். **கொன்சாகா கல்லூரி நிர்வாகத்தினர்,**
பேராசிரியர்கள், மாணவிகள்.

## ஏழைகளின் பாதுகாவலர்!

வான்மகன் மண்ணில் வந்து மனிதனாய் பிறந்தாரோ! – ஆம்
அன்னை மதலையே நீர் கருத்தாங்கி சுமந்தது
மனிதன் அல்ல! மனிதம் என்பதை உலகுக்கு மறைத்தாயோ!
என் தாய் காணி நிலத்தை விற்று கல்வி கொடுத்தாள் என்பீர்!
நிலமற்றவள் எதை விற்பாள் என யோசித்து
கைம்பெண் குழந்தைகளுக்கு கல்வி கடன் கொடுத்தீரோ!
மதம் என்றால் மனிதம் என்றீர்! – நீர்
மதம் கொண்ட மாந்தர் கண்ணில் மலையாய் நின்றீர்!
மாதர் தம் மடமை நீக்கி மகசேசே விருது வென்றீர்!
ஏழைக்கு தோணி தந்தீர்! தோளுக்கு தோள் நின்றீர்!
மங்கையர் வாழ்வில் மங்காத ஒளியாக ஐவிடிபி தந்தீர்!
ஊரெல்லாம் உறவுகள் உண்டு, உதவிக்கு யாருமில்லை
காலன் கொண்ட உயிருக்கு கடவுளாய் நின்றீர்!
மதங்கள் கடந்து மனிதம் காத்தீர்! – ஆம்
மழை வெள்ளத்தில் வாழ்விழந்தோர்க்கு கருணை மழையானீர்!
கடையெழு வள்ளல்கள் வாழ்ந்தது வரலாறு! – அதை
நாங்கள் இங்கு காண்பது எங்கள் பேறு!
இன்னலை கடந்து இன்பமாய் வாழ மின்னலாய் வந்தீர்!
உம் செயல் கண்டு திகைப்பதா? எளிமை கண்டு வியப்பதா?
ஐயா! நீர் மனிதர் அல்ல! மகான் என்பேன்!
இதையும் மறுப்பீர் புகழ்ச்சியை வெறுப்பீர்!
மக்கள் மட்டுமே மகுடம் என்பீர்! – எம்
மானுடம் தழைக்க பாதுகாவலராய் வந்தீர்!
வாழ்க! நீர் எம்மான் இவ்வையகம் தழைக்கவே!
ஏழைகளின் பாதுகாவலரே! நீர் வாழிய வாழியவே!

அன்புடன். திருமதி. **பாரதி மேரி**
ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்கள் பயிற்சி மையப் பொறுப்பாளர்

## வருகை புரிந்தவர்கள்...



d-Light நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. **சைலேஷ் குப்தா**
மற்றும் மேலாளர் திரு. **இராஜேஷ் பிரௌஸ்னி** வருகை



"வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை"

# ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்கள் விபரம் (டிசம்பர் 2021 வரை)

✦ ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் ✦ ஐ.வி.டி.பி. கிளைகள் : 79

| விவரம் | செப்டம்பர் 2021 வரை | அக்டோபர் - டிசம்பர் 2021 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.-யிலுள்ள மொத்த சுய உதவிக்குழுக்கள் | 14840 | 260 | 15100 |
| மொத்த சுய உதவிக்குழுக்கள் உறுப்பினர்கள் | 267120 | 4680 | 271800 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்தச் சேமிப்பு | ₹ 929.60 கோடி | ₹ 33.40 கோடி | ₹ 965 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப் பங்கீடு | ₹ 661.00 கோடி | ₹ 66.00 கோடி | ₹ 727 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | செப்டம்பர் 2021 வரை | அக்டோபர் - டிசம்பர் 2021 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 4824.26 கோடி | ₹ 206.34 கோடி | ₹ 5030.60 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ₹ 3836.62 கோடி | ₹ 79.00 கோடி | ₹ 3915.62 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 223.36 கோடி | ₹ 9.91 கோடி | ₹ 233.27 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 217.04 கோடி | ₹ 6.44 கோடி | ₹ 223.48 கோடி |
| மொத்தம் | ₹ 9101.28 கோடி | ₹ 301.69 கோடி | ₹ 9402.97 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி. (டிசம்பர் 2021 வரை)

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ₹ 38.00 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.87 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ₹ 3.73 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள் : குடிசை தீ விபத்து நிதியுதவி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினப் பரிசுகள், தையல் பயிற்சிகள், உறுப்பினர்களுக்கான வெள்ள நிவாரணப் பணி | ₹ 0.73 கோடி |
| மருத்துவமனை, சிறைகள், தொழுநோயாளிகள், முதியோர் இல்லம், ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், கடை நிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ₹ 2.07 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ₹ 0.45 கோடி |
| ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ₹ 14.91 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ₹ 23.73 கோடி |
| ஊக்குனர் மற்றும் பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை | ₹ 7.14 கோடி |
| கடந்த 42 ஆண்டுகளில் மனித நேயப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய தொகை | ₹ 102.63 கோடி |


## ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம், 9அ. சாந்தி நகர், 3வது கிராஸ், கிருஷ்ணகிரி – 635 001, தமிழ்நாடு, இந்தியா

04343-232 129, 236 420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org